
# நாளைய நாம்



நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய நாம்


எழுச்சிக் கவிஞர்

நீதிவாக்கியர்



அரங்கம்

வெளியீடு

அறிவொளி அச்சகம்

இல. 60, புதிய (கல்முனை) வீதி,

மட்டக்களப்பு,

இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைய நாம் (கவிதைத் தொகுதி)

நீதிவாக்கியர் (இரா. தவராஜா)

முதற் பதிப்பு:- 30 - 12 - 98

அச்சகம்:- அறிவொளி அச்சகம் மட்டக்களப்பு.

உரிமை:- திருமதி. சாந்தினி தவராஜா

பதிப்பாக்கம்:- ''அரங்கம்'' சஞ்சிகை

முகவரி:- இல 60, புதிய (கல்முனை) வீதி

மட்டக்களப்பு,

இலங்கை.

விலை:- 75/:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சி. மௌனகுரு

## அவர்கள் வழங்கிய

# முன்னுரை

தவராஜா ஏற்கனவே எழுச்சிக்கவிஞர் என அழைக்கப்பட்டவர். 1994 இல் ஒரு தொகுதியில் தன் கவிதைகளை வெளியிட்டவர். கவிதைத் தேன் பொந்து எனக்குறிப்பிடவும் பட்டவர். அரங்கம் என்ற பெயரில் 17 இதழ்களை நடத்தி 'அரங்கம் தவராஜா' என அறியப்பட்டவர். எழுபதுகளில் வெண்ணிலா கலைக்கழகம் நடத்தி நடிகனாக அறிமுகமானவர். அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாக, கலை இலக்கியத்துறையில் இயங்கி வருபவர். முயற்சியால் முன்வந்து இன்று அச்சக உரிமையாளராக; தன் வாழ்வை எழுத்தோடு பிணைத்துக் கொண்ட இலட்சிய இளைஞர் ஆர்வமும், விடா முயற்சியும், பணிவும், கற்கும் ஆர்வமும் உள்ளவர்.

இளமைப் பருவம் பல்வேறு உணர்வுக் கோலங்களை மனதில் எழுப்பும் பருவம். அகத்தோடு மாத்திரமல்ல புறத்தோடும்முரண்படும், போராடும் பருவம் சமூகத்தை, சமூகக்கொடுமைகளை விமர்சனம் பண்ணும் பருவம். இப் பருவத்தில் இவ்வுணர்வுகளைப் புலப்படுத்த கவிதையை ஓர் ஊடகமாகப் பலரும் பயன் படுத்துவர். தவராஜாவும் இதற்கு விதிவிலக்கன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கவிதை என்றால் என்ன? என்று ஒரு கேள்வி எழுகிறது. இதற்கு விடை தருவது சிரமம். அது பெரியதொரு விவாதத்தில், அல்லது கட்டுரையில் நம்மைக் கொண்டு விட்டு விடும். அதற்குப் பதிலாக கவிதை என்று இனம் காண வைப்பது எது என்ற கேள்வியைக் கேட்டுப் பார்க்கலாம்.

முன்னாளில் யாப்புக்குள் எழுதும் அனைத்தையும் கவிதை என்று இனம் காணும் வழக்கம் இருந்தது. இவ்வழியில் மரபுவழி யாப்பில் எழுதும் அனைவரையும் புலவர்கள் என அழைத்தனர்.

பின்னாளில் அச்சமைப்பினால் வசனங்களை மாற்றிப் போட்டு யாப்பற்ற கவிதை எழுதும் மரபு ஆரம்பமானது. அதைக் கொண்டு கவிதை என இனம் காணும் தன்மை தோன்றியது. இவ்வண்ணம் எழுதிய அனைவரையும் புதுக் கவிதைக்காரர் என அழைத்தனர்.

இன்று இவற்றில் ஏதோ ஒரு மரபில் அல்லது இரண்டு மரபுகளிலும் எழுதும் பலரை நாம் காணுகின்றோம்.

இதற்கும் மேலாக நல்ல கவிதை மோசமான கவிதை எனத் தீர்மானிப்பதற்கு இன்னும் பல அம்சங்களுண்டு. அது கவிஞனின் கவிதைப் பயிற்சி, ஆளுமை, கவிதா நோக்கு, அனுபவம் ஆகியவற்றைப் பொறுத்த விடயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமைப்பு கவிதையை முன்னிறுத்தும் காரணி ஆன பின்பு கவிதை எழுதுவது சுலபமான விடயம் ஆகிவிட்டது. மொழிப் புலமை மிக்க சிலரே கவிதை எழுதலாம் என்ற நிலை மாறி எல்லோரும் கவிதை எழுதலாம் என்ற நிலை உருவாகி விட்டது. இது ஒரு நல்ல சூழல்தான் ஜனநாயக அம்சம்தான் ஆனால் இது கவிதை உலகில் சில வேண்டத்தகாத விளைவுகளையும் கொணர்ந்து விட்டது என்பதனையும் மறந்து விடலாகாது.

தமிழ்க் கவிதை உலகில் வானம் பாடிகளின் வரவும், ஒரு பொருளை வித்தியாசமான கற்பனையோடும், வலிந்து உருவாக்கும் படிமங்களோடும் அவர்கள் எடுத்துக் கூறும் பாணியும் (உதாரணமாக மின்னலை கடவுள் ஊன்றும் செங்கோல் என வர்ணிக்கும் பாணி) வந்து புகுந்த வேண்டத்தகாத விளைவுகளாகும். இதன் இன்றைய ஜனரஞ்சக வாரிசுகளாக மேத்தா, வைரமுத்து ஆகியோர் மிளிர்கின்றனர். இன்றைய பெரும்பாலான இளம் கவிஞர்களின் ஆதர்சகர்களும் துரதிஷ்ட வசமாக இவர்களே.

நமது தமிழ் கவிதை வரலாற்று ஓட்டத்திலிருந்து தவராஜா தப்ப முடியுமா? வரலாறு நல்லதையும் கெட்டதையும் சுமந்து வரும். நாம் அன்னப் பறவைகளாக நின்று நல்லதைப் பொறுக்க வேண்டும். தவராஜாவிடம் மரபுக் கவிதையுமுண்டு வசன கவிதையுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களை வைத்துக் கொண்டு சொல்லில் விளையாடும் திறன் தவராஜாவின் பல கவிதைகளிற் காணப்படுகின்றன. பூவைக்குப் 'பூ' வை ''அத்தான் வாங்க பொங்கத்தான்'', சிரிப் 'பை' க் காட்டுவதேன்' 'வேப்பையடி இப்போ குப்பையடி' 'எப்படிப் பொங்கடி தோழி' போன்ற கவிதைகள் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். இது தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியால் சமகாலக் கவியுலகில் பிரபல்யம் பெற்ற பாணி. கவியரங்கில் இது பார்வையாளரைச் சிரிக்க வைப்பதனாலும் சராசரி மக்களை வியப்பிலாழ்த்துவதனாலும் பிரபல்யமாயிற்று.

சூரியன் நித்திரை உதறி
நிலத்துக்கு
தங்கமுலாம் பூச
வானம் சோம்பலை முறித்து
அவிழ்த்து விட்ட
கூந்தலை
அள்ளி முடியும்.

போன்ற படிமங்களும் கையாளப்பட்டுள்ளன. இவைகள் உயர்ந்த கவிதைக்குரிய பண்புகள் அல்ல.

அப்படியாயின் தவராஜாவின் கவிச் சிறப்புக்கள் யாவை?

தவராஜாவின் கவிதைகளிலே பொதுவாக சிறுமை கண்டு, போலித்தனம் கண்டு பொங்கும் மனம் வெளிப்படுகின்றது. இது ஒரு கவிஞனுக்குத் தேவைப்படும் அடிப்படைத் தகுதிகளுள் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் முதலாவது தனிக் கவிதைத் தொகுப்பின் மூலம் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகுக்குத் தவராஜா அறிமுகமாகின்றார். தமிழ் மரபின் சிறந்த கவிதைகளின் தொடர் பயிற்சியாலும், அவற்றைத் தன்வயப்படுத்துவதனாலும், தமிழ் மொழியை அதன் ஆழ அகலப் பரிமாணங்களுடன் கையாளும் திறனை மேலும் விருத்தி செய்வதனாலும் அவர் கவிதையுலகில் மேலும் வெற்றிகள் பெற வாய்ப்புகளுண்டு.

விடா முயற்சி மிக்க தவராஜா அதனை சாதிப்பார் என்பது எனது நம்பிக்கை. தவராஜாவுக்கு என் வாழ்த்துக்கள்!

**பேராசிரியர். சி. மௌனகுரு**
**கிழக்குப்பல்கலைக் கழகம்**
**28 - 12 - 1998**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் சா. இ. கமலநாதன்

## அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

கவிஞன் ஏன் பாடுகிறான் என்று ஒரு வினா எழுகிறது. தான் கண்டு, கேட்டு, அனுபவித்த ஒன்றை தன்னுள் அடக்கி வைக்க முடியாமையி னாலேதான் கவிஞன் பாடுகிறான் என்று கூறலாம். அவ்வாறாயின் பாடுவ தெல்லாங் கவிதையாகி விடுமா? புலவன் தான் அனுபவித்த வற்றை எவ் வாறு கூறுகிறான் என்பதிலே தான் கவிதையின் சிறப்பு தங்கியுள்ளது.

'நீதிவாக்கியர்' என்ற புனை பெயரில் "நாளைய நாம்" என்னும் இக் கவிதைத் தொகுப்பு திரு. இரா. தவராஜாவால் எழுதப்பட்ட நாற்பத்தி நாலு பாடல்களை உள்ளடக்கியது. இவற்றிற் சில இன்றைய யுத்தச் சூழலில் நம்மவர் படும் அவலத் தையும், அராஜகங்களையும், அங்கலாய்ப்புக்களை யும் கூற விழைகின்றன. சிட்டுக் குருவிகளுக்கும், ஆடுகளுக்கும், கழுதைகளுக்கும் இருக்கும் சுதந்திரம் நமக்கில்லையே யென்னும் அங்கலாய்ப்பு... "மனிதப் பிறவி எனக்கு வேண்டாம்" என்னும் பாடலிலே கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்த நாயும்
எந்த நாயையும்
சோதிப்பதில்லை
இவைகளினால்
ஆண்டவா
அடுத்த பிறவியிருந்தால்
எனக்கிந்த
மனிதப் பிறவி
வேண்டவே வேண்டாம்"

இவ்வரிகள் இராணுவ சோதனைச் சாவடிகளினால் அடையும் விரக்தியை புலப்படுத்த முயல்கின்றன.

ஒருவனின் நல்லுணர்வுகளும் எதிர் பார்ப்புகளும் அமுக்கப் பட்டு, நசிக்கப்படும் போது, அவன் தன்னைக் காப்பாற்றவும், சில வேளை பழி வாங்கவும் பயங்கர வாதியாய் மாறி விடுகிறான் என்பது "பூ... இவ்வளவுதானா" என்ற கவிதையிற் கூறப்படுகிறது. மணம் வீசிய பூ ஒன்று கசக்கப்படுகிறது. பின்னர் அது முள்ளாக மாறித் தன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் மகிழ்ச்சி காண்கிறது.

"பூவானால் தவிப்பு
முள்ளானால் காப்பு
இதனால்,
பூ எனக்கு வெறுப்பு
முள்ளே என் அணைப்பு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல் நிலையங்களைக் கடந்து செல்லும் பெண்கள் புன்னகை புரிந்து தொல்லையை வலிந் திழுக்கும் நிகழ்வுகள் இன்று சர்வ சாதாரணம் இதனை,

"செக்கிங் பொயின்ரில்
புனிதா
"பை யை"
காட்டச் சொன்னால்
ஏன்?
சிரிப் "பை"
காட்டுகிறாய்?"

என்ற வினாவை எழுப்பி விட்டு

"பொம்பளை சிரிச்சாப்
போச்சு
புகையிலை விரிச்சாப்
போச்சு
புனிதா
நீ சிரிக்காதே"

என அறிவுரை கூறும் பாணியிலே அமைந் துள்ளது. 'பை' என்ற ஓரெழுத் தொருமொழியை நகைச் சுவைதரப் பயன் படுத்தியுள்ளது நோக்கற் பாலது.

அனுப்புங்கள் அகதி விசா, தொலைந்து போன முகவரி, சமாதானச் சமாதி, வருக வருக சமாதானமே வருக, வேப்பையடி இப்போ குப்பை யடி போன்ற பாடல்கள் கவிஞரின் இக்கால சமுதாய உணர்வுக் கண்ணோட்டத்தைக் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களிலே ஆங்காங்கு கிண்டல்ரசம் லாவகமாக இழையோடியிருப்பதையும் நாம் அவதானிக்கலாம்.

மட்டக்களப்புப் பட்டணத்தின் மத்தியில் அமைந்துள்ள மணிக் கோபுரம் தன் பல்வேறு நிகழ்ச்சிகளாற் பிரபல்யமானது.

''சகல கொடிகளையும் வேற்றுமை பார்க்காது உன் முகட்டிலே பறக்கவிடுவதால், நீ ஒரு ஜனநாயகவாதி, ஆள்வோரின் அடையாளச் சின்னம், நீ ஒரு சுமைதாங்கி, சிலவேளை நீ ஒரு இசைக் கல்லூரி''... ஆனாலுமென்ன......... உன்னில் ஒரு குறை......

''இறந்த காலத்தையும்
நிகழ் காலத்தையும்
கட்டியங் கூறும்
மணிக்கோபுரமே
உன் தொழிலான
சரியான நேரத்தை
நாற்புறமும் காட்டு''...சரியான நேரத்தைக் காட்டவேண்டியதுதான் உனக்குரிய முதன்மையான தொழில்... அதைச் சரியாகச் செய்தபின் அல்லவா ஏனைய தொழில்கள் எனச் சுட்டிக் காட்டுவது கிண்டல் மட்டுமல்ல பொருத்தமான நேரத்திலே பொருத்தமான சில மனிதருக்குப் பொருத்தமாகச் சொல்லி வைக்கும் அறிவுரையுங் கூட

சமகால நிகழ்வுகளை உணர்ச்சி பூர்வமாக அவதானிக்கும் கவிஞர், புதுக்கவிதை எழுதும் ஆற்றலை மட்டுமன்றி மரபுக்கவிதை இயற்றக்கூடிய தனது இயற்கையான ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டுமென ஆசிக்கிறேன்.

சா: இ. கமலநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு அரசடிப் பாடசாலையில் தொடங்கிய ஆண்டே ஐம்பத்தி எட்டு வெள்ளம் என் பள்ளிக் கதிரையையும் அள்ளிக் கொண்டு போனது.

பெரிதாக சொல்லிக் கொள்ள பட்டப்படிப்பை தொடா விட்டாலும் கற்றவர் தள்ளி வைக்க முடியாமல் சாதாரணமான வெற்றியோடு பள்ளியை விட்டு வெளியேறினேன்.

மொழி, மதம், சமூகம், கலை, கலாசாரம், அரசியல் இவைகளை என் விழிகள் மோகித்தன அவை கவிதைகளாக கருத்தரித்தன.

என் கற்பனையில் கருத்தரித்த முத்துக்களே புத்தகமாக உங்கள் கையில் இப்போது தவழ்பவை இவையெல்லாம் என் எழுத்துச் சித்திரங்கள் அல்ல என் இதயத்திலிருந்து வெளியாகும் இச் சமூகத்துக்கான விண்ணப்பங்கள். நான் கேட்பது, சீறுவது, கிள்ளுவது, கிழிப்பது எல்லாம் இச் சமூகத்தின் உயர்வான பரிணாமத்துக்கே.

என் பேனா பிரசவித்த கவிதைகளை தங்கள் (பத்திரி)கைகளால் உங்களுக்குத் தந்த தொண்டன், சுமைதாங்கி, வீரகேசரி, தினகரன், மித்திரன் வாரமலர், சத்தியவசனம், சுவைத்திரள், ஈழநாடு (கனடா) என்பவற்றை நன்றிப் பெருக்குடன் இந்நேரத்திலும் முத்தமிட்டுக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுக் கவிதையை விரும்புகின்றவர்கள் உன் கவிதையை மரபுக்குள் விதை என்கிறார்கள் புதுக் கவிதை வாசகர்களோ புதுக்க விதை என்கிறார்கள்

நான் மரபுக்குள் விதைத்து மரபுக்கவிதை யும், தந்துள்ளேன். புதுக்க விதைத்து புதுக்கவி தையும் தந்துள்ளேன்.

ஒரு சாப்பாட்டு மேசையில் வயது வித்தியா சம், தேக ஆரோக்கியம், காலநிலை இவை போன்ற காரணிகளை வைத்து விருந்தை ஒழுங்கு பண்ணு கிறவர் சாப்பாட்டு மேசையில் தேவையான உண வுகளை வைப்பதே நன்று அவ்வாறே இத் தொகு ப்பில் பல விதமான கவிதைகளை உங்கள் முன் படைத்துள்ளேன்.

உங்களுக்கு பிடித்தமான, தேவையானவைக ளை ரசித்து சுவைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு ஒவ்வாத உணவை உட்கொண்டு விட்டு வாந்தியெடு த்தால் அதற்கு நான் பொறுப்பல்ல.

முன்னுரையில் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் கூறியது போன்று அன்னப் பட்சியாக பொறுக்கிக் கொள்ளுங்கள்.

இக் கவிதை நூலுக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கட்கும், அணிந் துரை வழங்கிய வித்துவான் சா. இ. கமலநாதன் அவர்கட்கும் இந்நூலை வெளிக்கொணர ஆக்கமும், ஊக்கமும் அளித்த சகலருக்கும் என் இனிய நன் றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்
நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


முன்னுரை ... 1
அணிந்துரை ... 6
என்னுரை ... 10
பொருளடக்கம் ... 12


## நாளைய நாம்


1. மனிதப் பிறவி எனக்கு வேண்டாம் ... 1
2. பூ ... இவ்வளவு தானா? ... 3
3. அத்தான்! வாங்க பொங்கத்தான்! ... 4
4. குரவை எழுப்ப குமர்களில்லை ... 5
5. தலையணை ... 6
6. சிரிப் "பை" காட்டுவதேன் ... 7
7. உளம் பொங்க... ... 8
8. தாய்ப்பால் வரப்பிரசாதம் ... 9
9. ஆட்டோ ... 11
10. மெல்ல வீசு பூங்காற்றே... ... 12
11. புனர் வாழ்வு கொடுத்து விடு ... 14
12. வயதுக்கு வந்து விட்டாய்... ... 15
13. அனுப்புங்கள் அகதி விசா ... 17
14. அனுதாபம் ... 18
15. மாணவ தட்சணை ... 19
16. தொலைந்து போன முகவரி ... 20
17. மிராசுதார தோட்டிகள் ... 22
18. அச்சாப்... பூனை ... 24
19. தொடர்பறுந்த தொப்புள் கொடி ... 25
20. சமாதான சமாதி ... 27


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 . வருக! வருக!! சமாதானமே வருக ... 29
22 . போதிமரமும்... பொதிகை மகளும் ... 31
23 . (எதை) ... 32
24 . பூ... பூத்தென்ன பெருமை ... 33
25 . விடு வீண் அலங்காரம் ... 34
26 . கோலம் போடடி தமிழிச்சி! ... 35
27 . வேப்பையடி இப்போ குப்பையடி ... 36
28 . எப்படிப் பொங்கடி தோழி? ... 37
29 . நல் தையே வா ... 38
30 . பூவைக்கு பூ வை ... 39
31 . செந்தணழில் தைப் பொங்கல் ... 40
32 . தவமகன் தவழ்கின்றார் ... 41
33 . தொட்டிலில் புத்தெழில் ... 42
34 . வெள்ளியின் செய்தி ... 44
35 . அழியாத் தகைமை ... 45
36 . ஒரு ஓரத்தின் உதயத்தில்! ... 46
37 . தலைமைக்காக ... 48
38 . வெற்றிலை மென்றதாலே ... 49
39 . அன்னை தெரேசா ... 51
40 . மட்டுநகர் மணிக் கோபுரம் ... 52
41 . அமுத நிலவே ... 54
42 . ஓர் விண்ணப்பப் பத்திரம் ... 55
43 . நாளைய நாம் ... 57
44 . வளர்ப்போம் அன்புப் பயிர் ... 70


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பிறவி எனக்கு வேண்டாம்

மனிதனுக்கு மனிதன்
குண்டு வைப்பானென்று
மனிதனை மனிதன்,
சோதித்து
இங்கே
மனிதத்தை
தேடுகின்றான்

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டுக் குருவிகளுக்கு
'செக்கிங் பொயின்ட்'
இல்லவே இல்லை
அவை எப்போதும்
சுதந்திரமாகவே
சிறகு விரிக்கின்றன.

ஆடுகளுக்கு
'ஐடின்ரிகாட்' கிடையாது
அவை
அறுபடுமட்டும்
இரையும் இலவசம்

கழுதைகளுக்கு
'றவுண்டப்' கிடையாது
அவைகளில்
முக மூடிகளுமில்லை

எந்த நாயும்
எந்த நாயையும்
சோதிப்பதில்லை
இவைகளினால்
ஆண்டவா
அடுத்தபிறவியிருந்தால்
எனக்கிந்த
மனிதப் பிறவி
வேண்டவே வேண்டாம்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ.........இவ்வளவுதானா?

பூவாய் வளர்ந்தேன்
பிறர் நோகாமல்
பூவாய் நடந்தேன்
பூ......இவ்வளவுதானா?
என்று
கொய்தென்னை
நுகர்ந்து பிசைந்து
என் இதயத்தை
தம் காலடியில்
போட்டனர்.

முள்ளாய் மாறினேன்
என்னை
நசுக்குவோர்க்கு
முள்ளாய் மாறினேன்.
இப்போ
நுகர்வதுமில்லை
பிசைவதுமில்லை
பக்குவமாய்
வேலிக்கிட்டார்கள்
கசக்கப் படாமல்
காவலாயிருக்கின்றேன்.

பூவானால் தவிப்பு
முள்ளானால் காப்பு
இதனால்
பூ எனக்கு வெறுப்பு
முள்ளே என் அணைப்பு.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தான்! வாங்க பொங்கத்தான்!

இளமுழவன் என் மச்சான் - நெல்
களமுழுதும் கழனியவன்
நில முழுதான் என்னுளமுழுதான் - தோழி
இளங்கொடியை அளவிட்ட இளந்தாரி
களம்விட்டு கதிர றுத்து வருவானோ - சொல்
இளஞ்சிட்டு இங்கு ஏங்குதென்று

பேதையிங்கு அத்தான்வரும் - அந்த
பாதை பார்த்து பரிதவிப்பு
கோதையே கேள் ஊடல்போதும் - மேலும்
வாதை செய்தது காணுமென்று
வா'தையில் வாரியள்ளிப் பொங்க - இம்
மாதை மறக்காமல் வரச்சொல்

இத்தை இனிதாய் பொங்க - உன்
அத்தைமகள் ஏங்குகிறாளென்றும்
வித்தை காட்டியது போதும் – நெல்
முத்தைச் சேர்த்து வாசும்
இத்தரை இம்முறை வியக்க - என்
அத்தான் இங்கு பொங்க வேண்டும்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரவை எழுப்ப குமர்களில்லை

மங்கள விழாக்களில்
மங்கையரின்
குரவையொலி
பட்டுப் போய்
படுத்து விட்டது.

கிழிந்து போன
பட்டு வேட்டி
'றங்கு'ப் பெட்டிக்குள்
அடங்குவது போல்
குரவைக் கலாசாரம்
வறியவனின்
வயிறாய்
ஒட்டி உலர்ந்து விட்டது

பெண்களை
குயில்களென்று
பெருமைப் பட்டாய்
தமிழா
இன்று
குரவையெழுப்பக்
குமர்களில்லை

தமிழ்க் குமர்காள்
தமிழிச்சியாய் எழுங்கள்
கலாசாரம் கனிய
கை கொடுங்கள்
கோகிலமாய் கூவுங்கள்
குரவையெங்கும்
ஒலிக்கட்டும்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையணை

தலைக்கனத்தை சற்று
இறக்கி வைத்து
தலை சாய்க்கும்
தாம்பாளம்

ஆறாத்துயர் கொண்ட
ஆரணங்குகள்,
சுமங்கலிகளின்
கண்ணீர் ஓடை
சங்கமமாகும் சோகக்கடல்

காதலர்களின்
கற்பனை நெருடலுக்கு
இயைந்து கொடுக்கும்
தோழமைப் பேழை

ஒழுக்கமற்ற
பிரகிருதிகளுக்கும்
ஒத்துழைப்பு வழங்கி
நிஜங்களை நெஞ்சில்
தேக்கும் நிரந்தர ஊமை

பதியின் மதிமயங்க
மந்திரம் போடும்
சதியின் மந்திர கூடம்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப் "பை" காட்டுவதேன்

"செக்கிங் பொயின்'' ரில்
புனிதா
''பை'' யை
காட்டச் சொன்னால்
ஏன்?
சிரிப் 'பை''
காட்டுகிறாய்?

''கை'' வீசம்மா
கை வீசு
என்றே
உனை பாடி வளர்த்தேன்
நீயோ
புன்ன ''கை''
வீசுவதேன்?

பொம்பளை சிரிச்சா
போச்சு
புகையிலை விரிச்சா
போச்சு
புனிதா
நீ சிரிக்காதே
என் நெஞ்சல்லவா
புகையிது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளம் பொங்க . . . .

கரும்பிளநீர், வாழை, மாவிலை
வெண்பால், சர்க்கரை, புத்தரிசி, கற்கண்டு
இவை கண்டு செங்கதிரோன் சிரிக்க
புதுப்பானை உளம் பொங்கி
விளிம்பிலே வெண் நுரை...
அன்பு, அகிம்சை, இரக்கம், பொறுமை
சாந்தி, சமாதானம், நல் வாழ்வு கண்டு
செந்தமிழர் உளம் பொங்கி
இதழ் விளிம்பிலே முறுவல் பூக்க
சிரிக்கட்டும் செந்தரை...

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பால் வரப்பிரசாதம்

ஆண் கண்கள்
ஆசைக்கு
தீனி போட
ஒய்யாரத்
தொட்டிலமைத்து
அழகூட்டும்
அங்கமில்லை
உன்
மார்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றெடுத்த
சிங்காரக் குழந்தை
சத்துக் குறையற்று
மேதினியில்
கால் பதிக்க
வாய் பதிக்கும்
அமுத சுரபி
ஆண்டவன்
அருளிய
வரப்பிரசாதம்

அழகு குறையுமென
உன் திருக் குழந்தைக்கு
பால் பருக்க
மறுதலிக்கும்
மாதாவே!
நாளை
உருக்குலையும்
இவ்வுடம்பு
சத்தியம்

பருக்கு
தாய்ப்பால்
உருவாகட்டும்
முழுப் பலமுள்ள
நம் சமுதாயம்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டோ

பயணிகளைச் சுமந்து
தன் " பாட்டுக்கு "
ஆடிக் கொண்டே
ஓடுகின்ற
பைலா சக்கரவர்த்தி

காதலர்கள்
நெருங்கி நெருட
ஒத்தாசை புரிந்து
குலுக்கி குலுக்கி
உறவாட வைக்கும்
உல்லாச ஓடம்

கர்ப்பிணிகளுக்கு
மருத்துவர் தரும்
பிரசவ தேதியை
தோற்கடித்து
முன்பே
பிரசவிக்க வைக்கும்
பிரசவ அறை

உயிராபத்து
நேரங்களில்
போக்குவரத்து
நெரிசலுக்கு
ஈடு கொடுத்து
வைத்தியரிடம்
கொண்டு சேர்க்கும்
மினி அம்புலன்ஸ்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்ல வீசு பூங்காற்றே...

பூங்காற்றே !
இங்கு நீ
வேகமாக
வீசாதே
பூவிலும் மெல்லிய
என் மகனுக்கு
நோவெடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லையே !
என் மகன்
முன்னே
விரியாதே
அவனின்
வெள்ளைச் சிரிப்பு
உன்னை
வேதனைப் படுத்தும்

கிள்ளையே !
என் பிள்ளை முன்
பேசாதே
மழலை
திருவாய்
மலர்ந்தால்
நீ
வெட்கித்து
தலை குனிவாய்

மகா கவி
பாரதிக்கு
இனித்த மொழி
தாய் மொழியாம்
எனக்கினிப்பதோ
என்
சேய் மொழியாம்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர் வாழ்வு கொடுத்து விடு!

அம்மா!
புது வருடத்துடன்
நான் பூத்து
பல வருடமாகிறது

கிணற்றடியில்
வாளிச் சத்தம்
கேட்டால் போதும்
வாலிபர்களின்
கேலிப் பேச்சும்
கிண்டல் கணையும்
வேலி தாண்டி
பாய்ந்து வருகிறது

அழுக்குப் போக்க
சோப்புப் போட்டால்
வேலிக்கிடுகில்
விழிகள்
பூக்கின்றன
என் வயதும்
வேலியும்
ஒரே வயதாகிறது

அம்மா!
இரண்டுக்கும்
புனர் வாழ்வு கொடுக்க
புனரமைப்பு
செய்து விடு!

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதுக்கு வந்துவிட்டாய் . . .

மகளே! செல்லக்கிளி!!
மறந்திடாதே
நீ
மலர்ந்து விட்டாய்!

மிட்டாய் வாங்கவென
மீசையண்ணன்
தட்டிக் கடைக்கு
தவறியும்
போய் விடாதே
முன்பு
ஆசையோடு
கன்னத்தை கிள்ளி
அன்பு மிட்டாய்
தருவார்
இப்போ . . . .
நீ
வயதுக்கு வந்துவிட்டாய்!

சுட்டிப் பயல்களோடு
சட்டிக்கோடு
விளையாட
இனிப்
போக முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ
முன்பு
நெற்றிப் பொட்டில்
சில்லை வைத்து
ரைட்டா?... ரைட்டா?...
என்று
கேட்டு வருவாய்
அப்போது கண்களெல்லாம்
உன்
காலைப் பார்க்கும்
ஆனால்
இப்போ
நீ
வயதுக்கு வந்து விட்டாய்

மகளே,
நற் பண்பு
நான்கோடு
நீ வாழ
நான் கோடு
போடுகிறேன்
இக் கோட்டுக்குள்
நீ வாழ
எக்கேடும்
நெருங்காது
இவை யெல்லாம்
ஏன் என்றால்...
இப்போ...
நீ
வயதுக்கு வந்து விட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுப்புங்கள் அகதி விசா

அத்தான் நீங்களோ
கனடாவில் அகதி
நான் உங்கள்
கண்மணிகளோடு
கற்பனையில் அவதி!

மூத்த மகள் சாமிக்காவின்
டடி எங்கே? என்ற சச்சரவு
என்னை எப்போதும்
சலனப்படுத்துகிறது

இளையவள் நிலுசிகா
வீதியில்
காண்போரையெல்லாம்
டடா... டடா... என்றே
எஃறித் தாவுகிறாள்
விரைவில் எடுக்கிறேன்
விசா அனுப்புகிறேன்
என்று வந்த மடலுக்குப் பின்
நத்தார் தாத்தா நாலுமுறை
வந்து போய் விட்டார்

தலைவனின் அன்புக்கும்
தகப்பனின் அணைப்புக்கும்
ஏங்குமிந்த
மூன்று ஜீவன்களுக்கும்
அனுப்புங்கள் விரைவில்
அகதி விசாவை.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபம்

''ஏசிரூமு''க்குள்ளிருந்த
ஏகாம்பர முதலாளியின்
ஜன்னல் விழிகள்
தூசி, சஉக்கடையகற்றும்
கண்ஞுச்சாமிக்காய்
கண்ணீர் விட்டது!
இதனைக் கண்ட அவரது
ஆசைமகன் எழுதிய
புதுக் கவிதை இது:-
வெளியில் வெயிலடிக்குது என்று
''ஃபிறிச்சில்'' ஐஸ்கட்டி
அனுதாபம்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ தட்சணை

எழுத்தறிவித்தவன்
இறைவனாகும்
அன்று
இறைவனுக்கு மட்டுந்தான்
தட்சணை
இன்று
பக்தனுக்கும்
தட்சணை
அது தான்
மாணவ மதிய
உணவு முத்திரை.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்து போன முகவரி

துப்பாக்கிச் சேவல் கூவ
வைகறை கண் சிவக்க
அகதி முகாமில்
வெள்ளைக் கொடி அசையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக் குறிகள்
அமெரிக்கன் மாவுக்காய்
அழைக் கழியும்
கால் மாத்திரைகள்
பால் மாவுக்காய்
பரிதவிக்கும்

கூழும் ஊறுகாயும்
உணவாய்ச் சேருமதில்
சிந்தும் கண்ணீர் உப்பும்
வந்து கூடும்
செத்துச் செத்து
பிழைப் போருக்கிடையில்
இவர்கள்
பிழைத்துப் பிழைத்துச்
சாகிறார்கள்

ஆள்வோரின் அரவணைப்பில்
முக்காலை முழுசு விழுங்க
கால் வாசி இவர்கள்
கால் வயிற்றைக் கழுவும்

இவர்கள் தொலைத்து விட்ட
முகவரியில் தவறிய தபால்
எப்போது வந்து சேரும்?

✲ நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிராசுதார தோட்டிகள்

மட மடப்பை
இறுக அணைத்த
பட்டு வேட்டியே
இடுப்பை வளைத்து
முத்தம் கொடுக்கும்
ஊரிலே நாங்கள்
மிராசுதாரர்கள்

கால் லகரத்துக்கு மேல்
ஆள் பிடிக்கும் கழுகுகளுக்கு
தட்சணை பண்ணி விட்டு
சீராய் உழைத்து
ஜோராய் வாழ
புஸ்பத் தேர் ஏறியவர்கள்.

சவுதியில் இப்போ நாங்கள்
தோட்டிகள்.

ஊரிலே தோட்டிகள்
அருகில் வந்தால்
சாதி பிரிக்கும் எங்கள்
சபலப்புத்தி மகான்
நெருப்புக் கண்ணால்
சட்டென்று அடுப்பு மூட்ட
அவர்களுக்கு
விசமச் சடங்கு நடாத்தி
நையாண்டி செய்பவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவுதியில் இப்போ நாங்கள்
தோட்டிகள்
ஊரிலே மிராசுதாரர்கள்

ஊரிலே தோட்டிகள்
எங்களை விழித்தால்
தோள் துண்டு
இடுப்பை அலங்கரிக்க
குளிர் காய்ந்து
தலை குனிவான்.
சவுதியில் நாங்கள்
தலையில் துண்டைப் போட்டு
தகரத்துள் குனிகிறோம்
அரேபியர்களின் அழுக்கு
இருக்கிறதா? என்று
பார்ப்பதற்கு

சவுதியில் இப்போ நாங்கள்
தோட்டிகள்
ஊரிலே மிராசுதாரர்கள்

பாலைவனச் சீமையில்
அரேபியர்களின் அழுக்கை
அகற்றும் எங்கள்
இதய அழுக்கை ஊரிலே
எந்தத் தோட்டியால்
அகற்ற முடியும்
முடியாது நாங்கள்
மிராசுதாரத் தோட்டிகள்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாப் . . . பூனை

பால் வெள்ளைப் பூனை
பால் குடியாப் பூனை
வாலைப் பிடித்து இழுத்தாலும்
காலைக் கடியாப் பூனை
அருகில் எலி வந்தாலும்
திரும்பிப் பார்க்காப் பூனை
சோறு தீற்றக் கூப்பிட்டால்
சோம்பிக் கிடக்கும் பூனை

வெட்டி மீனை வைத்தாலும்
கிட்டப் போய் கவ்வாது
கட்டித் தயிரைக் கண்டாலும்
குட்டிப் பூனை நக்காது

பட்டுவால் குஞ்சம்
மெத்தை போல மேனி
அம்மா வாங்கித் தந்த
அச்சா பொம்மைப் பூனை.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பறுந்த தொப்புள் கொடி

ஒன்றே குலம்
ஒருவனே தேவன்
ஓரே தொப்புள் கொடியில்
உதித்தவர்கள் நாங்கள்
சொல்லிக் கொண்டே
பல சின்னக் கொடிகளை
நாங்கள்
பறக்க விடவில்லை.

எங்கள் சாவை
காக்கிச் சட்டையும்
சரித்திரத்தை
வெள்ளைச் சட்டையும்
என்றுமே
போர்த்திக் கொள்ளவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத் தோட்டத் தோடு
பிறந்த மனிதா உன்
இரத் தோட்டத்தை
தெருவிலோட
விட்டது மேன்!

மாசி 48 ல்
பெற்ற சுதந்திரத்தை
ஏ . கே . 47 ல்
போட்டுடைத்து
நட்டத்தை
தேடிக் கொள்ளவில்லை.
சிட்டுக் குருவிகள் தான்
நாங்கள் சிலையாகிப் போன
காந்தியின் தலை தனில்
எங்கள்
வெள்ளை உள்ளத்தை
வெளிக் காட்ட
சில வேளை எச்சாபிஷேகம்
செய்வதுண்டு

ஐயோ!
மனிதர்களே உங்களை
கண்டால் போதும்
சின்னச் சிறகை
விர்ரென விரிப்போம்
காரணம் சிலையாகிப் போன
மகாத்மாவையே சுட்டவர்கள்
நீங்கள் தானே!

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதான சமாதி

சிறகு விரிக்கும்
தூய புறாக்களே
பொறுங்கள்
எங்கே புறப்பட
விரிக்கின்றீர்கள்?

வேட்டு முட்காட்டுக்குள்
விழி வெண் படலமின்றி
குமைந்து வெம்புகிற
ஈழ நாட்டில்
சித்திரங்கள் என்றும் பாராமல்
சீறுகின்ற துப்பாக்கி முனையில்
அமர சிறகை மடியுங்கள்

சரித்திர தேவிக்கும்
சமாதி சமைத்த
பிரச்சனை சூழ்ந்த
பஞ்சாப்பை நோக்கி
பறக்கப் பாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே பார்க்கிறீர்கள்?
அது ஒலிம்பிக் பந்தயமல்ல
இருண்ட கண்டத்துக்குள்
சுருண்டு கிடக்கும்
ஆபிரிக்க அரும்புகளுக்கு
ஆகாரம் தேடி
ஆலாய்ப் பறக்கும் கூட்டம்

வெள்ளைப் புறாக்களே
அவர்களின் நலனுக்காக
இருட்டு நாட்டுக்குள்ளும்
விருட்டென்று
பறக்கப் பாருங்கள்.

ஓ . . . பறந்து பறந்து
சிறகு வலிக்கிறது என்று
குந்துவதற்கு இடம் தேட
விரிக்கின்றீர்களா?

தயவு செய்து
சமாதான மகா நாட்டில்
அமர்ந்து விடாதீர்கள்!
ஏனென்றால்
தூய வெள்ளையில்
கறுப்பு முத்திரை குத்தி
திரு விருந்து
நடத்துவார்கள்!

❖ நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருக! வருக!!
## சமாதானமே வருக!!!

பூப் பெய்திய
மனித ஜீவிதத்திற்கு
நித்திரை தொலைந்த
படுக்கை
நிம்மதி இழந்த
வாழ்க்கை

போர் துப்பிய
எச்சில்கள்
அயல் நாடுகளில்
அகதிகளாய்
அலைக்கழிகின்றன
உள் நாட்டில்
மேலும்
அபிவிருத்தி செய்யப்படுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம்
மீண்டும்
சிலுவையில்
அறையுண்டு
தாகத்துக்கு
தண்ணீர் கேட்கிறது

சண்டைக்கு
சாமரம் வீசி
சமாதானம்
சமாதிகளை
உருவாக்கின்றன

ஓடும் மீன் ஓடி
உறு மீன்
வரும் வரையும்
வாடி நிற்குமாம்
கொக்கு

நாங்களிங்கு
வெண் புறாவுக்காக
வாடி நிற்கின்றோம்
நாடி நிற்கின்றோம்
வருக! வருக!!
சமாதானமே வருக!!!

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதி மரமும்....
# பொதிகை மகளும்.....

புத் தெழிலுக்காய் புதுத் தென்புக்காய்
புத்தாண்டே வருக!
இத்தரை இனிதாய் மகிழ
புத்தாண்டே வருக!!

போதி மரம் சாமரம் வீச
பொதிகை மகள் பூத் தூவ
சாதி மத வேற்றுமை கலைந்து
மேதினியில் சமரசம் தழைத்தோங்க
சித்திரைப் புத்தாண்டே வருக

ஆதியிலே இருந்த மகிழ்வு
பாதியிலே பறி போனதுவே
பீதியான வாழ்வு நீங்கி
நீதியான நிலமை தோன்ற
சித்திரைப் புத்தாண்டே வருக

இலவம் காத்த கிளியாய்
இலங்கை மக்கள் மேலும்
கலங்கும் வாழ்க்கை நீக்கி
நலங்கள் சூழ இங்கு
சித்திரை புத்தாண்டே வருக.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (எ) தை

தை என்ற
வனிதை வந்தாள்
வதைபடும்
அகிலத்தை
வனப்பிழந்த கோலத்தைக் காண
தை என்ற
வனிதை வந்தாள்

எதை வைத்து பொங்குகிறார்?
பதைபதைக்கும்
இதயத்தை வைத்தா?
பழகிப் போன
பழங்கதை மரபை வைத்தா?
தொடர் கதையான சோகத்தை வைத்தா?
எதை வைத்து பொங்குகிறார்?
பார்த்திடுவோமே என்றே
தை என்ற
வனிதை வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ . . . பூத்தென்ன பெருமை

ஆடும் பூவில்
மோக வண்டு
தேன் குடிப்பது
எங்ஙனம்?

வண்டைத்
தேடும் பூவை
வசந்தம் பாடுமா?
வாழ்த்துரை

சூடும் பூவில்
புழு இருந்தால்
சூடிய இடத்துக்கு
எப்படிப் பெருமை?

கூடும் பூவில்
குறையிருந்தால்
குலத்துக்கு வரும்
குற்றமல்லோ?

போடும் பூ
இறைமடியானால்
மனதுக்கு வரும்
மகிழ்ச்சி
சாக்கடையில்
சங்கமித்தால்
பூவுக்கென்ன
புகழ்ச்சி

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடு வீண் அலங்காரம்

கண்ணுக்கு ஐடெக்ஸின் கருமை தீட்டி - நக
கண்ணுக்கு கியூரெக்ஸின் செம்மை யூட்டி
பெண்ணே உன் இதழுக்கும் லிப்ஸ்டிக்கின்
மைபூசி
அன்னியரின் கண்ணுக்கு கவர்ச்சி காட்டும்
காரிகையே
மண்ணுக்குள் புதையுமிப் பொய்
மண்ணுக்குகேன் இந்த அலங்காரம்?

தேகமிது பொய்யென
சந்தேகமில்லை தெரிந்திருந்தும்
மாய்கின்ற இக் காயத்துக்கு வேண்டுமிச்
சாயமெனத் தேடியே பூசி
காசை கரியாக்கும் காரிகையே
ஆசை விட்டொழி அலங்காரம் வேண்டாம்!

கருமையுன் கண்ணுக்கு போதும் - மிக
அருமை நல்லெண்ணெய் சிறுதுளி
செம்மை ஊட்டும் நகத்துக்கு - நல்
பெருமை சேர்க்கும் மருதாணி
இரு இதழுக்கும் அழகு சிவந்த மையல்ல
விரிந்த புன்னகையே போதுமதால்
விடு இனி வேண்டாம் வீண் அலங்காரம்!

☼ நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலம் போடடி தமிழிச்சி!

அந்தியில் அடிவானக் கோலம் - நிலா
பந்தியில் வெள்ளிகளின் கோலம்
தந்தியிலும் இசையின் கோலம் - நல்ல
தந்திரமோ, அறிவின் கோலம்

பருவம் செய்யும் கோலம் - மங்கைப்
பருவம் மஞ்சளாடும் கோலம்
உருவம் தொய்யும் கோலம் - தோல்
சுருக்கம் போடும் கோலம்

கார்த்திகையில் தீப விழாக் கோலம் - மாரி
கார் காலம் போடுவதோ நீர்க்கோலம்
கொக்கின் கோலமோ தவக்கோலம்
- குழந்தை
பக்கத்தில் படுத்தால் பாசத்தின் கோலம்
இப்படித் தினம் பற்பல கோலம் - இருந்தும்
முற்றத்தில் காணும் மாக்கோலம்
முத்திரை பதிக்கும் தமிழ்க் கோலம்
- ஆனாலின்னும்
எத்தனையோ பத்தினிகள் போடார்
இக் கோலம்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேப்பையடி இப்போ குப்பையடி

சாகுபடி சாகுபடி சாகுபடியைச்
சாகும்படி செய்தாங்க
ஏதுபடி ஏதுபடி என்று கேட்ட
ஏழைகளைச் சாகும்படி விட்டாங்க

பூமியடி இப்பூமியடி
பொன்விளைந்த பூமியடி
ஆமியடி ஆமியடி அழகு வயல்
காணியெல்லாம் ஆமியடி.

பஞ்சாயத்தார் ஒன்று கூடும் தேக்கையடி
சித்திரையில் ஊஞ்சல் கட்டி
ஊர் கூடும் வேப்பையடி
அடிக்கடி அவைக்கெல்லாம் ஷெல்லடி
அந்த இடமெல்லாம் இப்போ குப்பையடி

''கேம்'' படியில் பறிபோனது
வள்ளியின் முலைக் காம்படி
வேம்படியில் விளையாடிய
வீரர்களின் தலையிலோ ''பொம்''படி

ஆரடி நிம்மதியைத் தாரடி
ஆறடிக்குள்தான் சாந்தி பாரடி.

✲ நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படிப் பொங்கடி தோழி?

அவள்

கையடி - காலடி
கம்படி - கடுமடி - தோழி

இவள்

வல்லடி - ஷெல்லடி
வாழ்வடி - வருந்தடி - தோழி

அவள்

திடீரடி - திகைப்படி
தீங்கடி - தெரியடி - தோழி

இவள்

வருமடி - படையடி
தரும அடி - தருமடி - தோழி

அவள்

குண்டடி - கொடுமையடி
கொலையடி - எதற்கடி - தோழி

இவள்

விழுமடி - விதியடி
அழுதடி - ஆற்றடி - தோழி

அவள்

இப்படி - இருக்கடி
எப்படிப் - பொங்கடி - தோழி

இவள்

வங்கரில் - வசியடி
அங்கடி - பொங்கடி - தோழி

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல் தையே வா

எத்திக்கும் இனிதாக
ஏற்றமுடன் அழகு
முத்தை யெல்லாம் சிரோடு
முகவாய் சிந்தி
நத்தமிழர் இத்தையோடு
நல்லபடி வாழ
புத்தெழிலோடு வந்து
பொங்குக பொங்கலே

கல்லெடுத்து அரிசிதனை
கலசத்தில் இடும் வேளை
ஷெல்லடிச் சத்த மிங்கு
செவிதனைக் கிழித்து வரும்
சில்லோரின் சேட்டை நீங்க
சிரித்த முகமே தோன்றி
நல்லொளி நாட்டில் பரவ
பொங்குக பொங்கலே

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவைக்கு பூ வை

சாவைக் கவர்ந்து கணவர்
சாக்காடு போனதினால்
பூவைச் சுமக்க எனக்கு
பூரண உரிமை இல்லை
பாவை எனக்கும் உடல்தான்
பசி தாகமெல்லாம் வருந்தான்
தேவை எனக்கு பூ வையென்றால்
விதவை என்னும் வசையுமேனோ?

வெழியிலென்னைக் கண்டால்
வாசலில் காறித் துப்பி
முழிவுசலம் சரியில்லையென
முகத்திலறைவது போலிந்த
இழிவு நிலையை தமிழ்ச்சாதி
இன்னுமேனோ சுமக்கிறது,
வழிவழி வருகின்ற களங்கத்தை
வசை படாமல் நீ மாற்றிவிடு!

கண்ணால் என்னைக் கண்டால்
சகுனப் பிழையென்கின்ற
முன்னால் பிறந்த நல்
மூத்த குடியே நில்
உன்னால் கோவில் கட்டி
உருவேறித் தீ மிதிக்கும்
கண்ணகி அம்மன் கூட தன்
கணவனை இழந்த பெண்தானே!

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தணழில் தைப் பொங்கல்

செந்தேன் பொங்கினால்
செங்கமலம் சிரிக்கும்
செந்தமிழ ருளம் பொங்கி
செவ்வித மென்று சிரிக்கும்
செங்கதிரோன் சிரிக்க இன்று
செந்தணழில் தைப் பொங்கல்
செங்களம் கொதிப்படங்கி
செந்தரை இனிச் சிரிக்கட்டும்.

தீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவமகன் தவழ்கின்றார்

பற்றும் பாசமற்று
பலனற்ற வாழ்வு வாழ்ந்து
முற்றும் பாவத்தில் சுழன்று
முள்ளிலே பாதை அமைத்து
சற்றும் பரனை நாடாமல்
சகதியில் மூழ்வதைத் தடுக்க
புற்தொட்டில் வழியாகப் பாலன்
புவியண்டி வந்து சேர்ந்தார்!

மாபெரும் சக்தியினைக் கன்னி
மரி ஈன்று வைத்து விட்டாள்
ஓர் காலம் இவ்வுலகம்
ஒழுங்காக பரலோக
சீரான சிந்தனையை
சிரம் தாழ்த்தி ஏற்குமென்று
சீர் பெரிய தவமகனோ
சிரிப்போடு தவழ்கின்றார்!

எல்லோரும் வாழ; தான் மெழுகாய்
எரிந்து உருகவென்று
நல்லவர் மாழ வந்தார்
நம் பாவம் போக்க
சொல்லில் அடங்காத் துயரை
சொந்தங் கொள்ள சிரிக்கின்றார்
மெல்லிய பட்டுப் போன்ற
மேரியின் கையில் யேசு!

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொட்டிலில் புத்தெழில்

மாறி மாறி
மாரி வரும்
அந்த
மாரிக்குள்ளே
மேரியின்
பிரசவத்
தேதி வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியில் தண்ணீர்
ஊறி வரும்
அந்த ஊற்றும்
நத்தார் பாட்டு
கேட்டு வரும்

வைக்கோல் தொட்டிலில்
புத்தெழில்
பூத்து வரும்
அச் சேதியை
நட்சத்திரம்
கொண்டு வரும்

மேதினியில்
சாத்திரிகளின்
பவனி வரும்
அங்கே
பொன் வெள்ளி
தூபவர்க்கம்
காணிக்கையாய்
வரும்

பாலனின் காலடியே
நம்பிக்கை தரும்
இனி பாரினிலே
மீட்சி நமை
நாடி வரும்

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளியின் செய்தி

மின்னுது மிளிருது வெள்ளி - நம்
மன்னன் பிறந்ததைச் சொல்லி
எண்ணத்தில் எதையோ எண்ணி - இன்று
கண்ணைச் சிமிட்டுது வெள்ளி

கார்கால மேகத்து போர்வை - வந்து
பாரெல்லாம் சூழ்ந்திட்ட வேளை
சீராளன் பிறந்த நாளால் - இந்த
மார்கழி உயர்ந்தது பேரால்

முற்றத்து மல்லிகை மணக்கும் - மேலும்
சுற்றமெல்லாம் புகழ் பரப்பும்
வற்றாத பக்தி மணக்கும் - எங்கும்
கர்த்தர் கிருபையினால் சிறக்கும்

சிந்தை கலங்கி மக்கள் - சிதறும்
மந்தைக் கூட்டமானார்
எந்தை வந்தார் மேய்க்க - அதுவே
இந்த நன் நாள்

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத் தகைமை

பிச்சையிடுவதும் பாவமென
பிழையான கருத்தில் மூழ்கி
அச்சத்தை மனதில் வளர்த்து
அறத்தை மண்ணுள் புதையாதே
உச்சத்தின் நாயகருனக்கு
உரைத்த உன்னத வாக்கில்
பச்சை விளம்பரம் தேடாது
பகிர்ந்துண்ணப் பழகுமென்றார்

உடையி ரண்டு உனக்கிருந்தால்
உதவிடு அதி லொன்றை
கொடை யென்ற புகழ் பரப்ப
கொடுக்காதே கேள் நன்றாய்
இடையினிலே வரும் புகழ்
இம் மேதினிக்கே மாத்திரம்
தடையில்லையிரண்டி லொன்றை
தருவோர்க்கு விண்ணகத்தில்

ஈட்டுவதெல்லாம் ஈய்வதற்கென
இயம்பவில்லை பாரிங்கே
வாட்டுகின்ற வறுமையில் மேலும்
வாடுகின்ற மனிதர்க் குணவு
ஊட்டுகின்ற பண்பேயென்றும்
உன்னதத் தகைமை பிறருக்கு நீ
காட்டுகின்ற அன்பே என்றும்
காலத்தால் அழியாத் தகைமை

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ஓரத்தின் உதயத்தில்!

சூரியன் நித்திரை உதறி
நிலத்துக்கு
தங்கமுலாம் பூச
வானம் சோம்பலை முறித்து
அவிழ்த்து விட்ட
கூந்தலை
அள்ளி முடியும்

குங்குமச் சிமிழை
நெற்றியில் கொட்டி
வைகறையோ
இருட்டை
சலவைக்குப் போடும்

சவரம் செய்யும்
முகத்தில்
சவர்க்கார நுரையாய்
அலை வந்து கரையை
அரவணைத்துச் செல்லும்
முத்தம் பெற்ற பின்
மிச்சம் இருப்பது போல்
நுரையங்கு
அடையாளம்
காட்டும்

பூப்பெய்திய பூமியில்
நிச்சலனத்தை
பறவைகள் விழுங்கி
காந்தாரம் காணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெபி
சுஜி
இன்னும் .........
இப்படிப் பல
மீன் குதங்கள்
கரை யொதுங்கும்

ஏலேலோ .........
ஐலேசா .........
மீனவத் தேசிய கீதம்
சோம்பேறிகளை
உசுப்பி விடும்.

மாராப்பு கொள்ளா
மார்பு போல
வலையில் மச்சம்
விம்மும்
தாழி உடையாமல்
பகுத்தறிவுகள்
பவுத்திரமாய்
கரையேற்றும்

இரை தேடிகளும்
வியாபாரிகளும்
ஈக்களாய் மாற
பேரம் நடக்கும்
மச்சம் கைமாற
சூரியன்
உச்சத்துக்கு
பயணமாவார்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைக்காக

முப்பது வயதைத் தாண்டிய
மூத்த மகள் சதா முணுமுணுப்பு
அப்பா எழுதக் கொப்பியில்லை இது
அஞ்சாவது மகனின் தொண தொணப்பு
எப்ப பார் ஊர்த் தொடுசு
என்றே மனைவியின் கடுகடுப்பு
மப்படித்த கடனுக்கு வழியில்லை
மயில்ராசு கண்டால் ஒரே புறுபுறுப்பு

பஞ்சம் இப்படி தலை விரிக்க
படுக்கும் பாயும் முறுமுறுப்பு
பஞ்சாட்சரம் நல்ல மனிதர்
பழகுவதில் எப்போதும் கலகலப்பு
நெஞ்சு மயிரோடு தலையும் புழுக்க
நிம்மதியிழந்து ஒரே படபடப்பு
கொஞ்சம் கருமை வாங்கிப் பூசிய பின்
கொழுப்பாடு போலிப்போ சுறுசுறுப்பு

மப்படித்த கடனோடு மேலும்
மயிருக்கு மையடித்த கடனும் கூட
செப்பாலடித்த சல்லிக் காசும்
செலவுக் கில்லையென இல்லாள் வாட
உப்புக்கும் லாபமிலா இந்த
ஊர் வேலையோர் கேடா
எப்படித்தான் இழி நிலை வந்தாலும்
எப்போதும் தலைமைக்கு உழைக்கிறார்

- மாடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலை மென்றதாலே

இல்லாள் தன் கொவ்வை
இதழ் சிவக்க வென்று
கிள்ளி நார் எறிந்து
கிழக் கீழ வெற்றிலையும்
நல்லூர்ப் புகையிலையும்
நற் சுண்ணம் பாக்குடன்
அள்ளித் தன் வாயிலிட்டு
அசை போட்டிருக்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணாக்கும் உன் முகத்தில்
புரையோட வைக்கும்
உன் நாக்கும் பல்லும் மிக
உழுத்தே போய் விடும்
மண்ணாக்கும் பணத்தை
செலவாக்கும்
மனையாளே நீர் கேளடி
கன்னம் பழுதாகி தசை
கரைந்தே போய் விடுமதனால்

வேண்டாமிப் பழக்கமென
வேண்டியே மனைவியிடம்
வீண் வம்பு தரும்
வேம்பான பழக்கமென்று
நான் கேட்டுத் தொல்லை
நாள் தோறும் கொடுப்பேன்
தேன் மொழியாள் செப்புவது
தேவையில்லாப் பயமென்று

தாம்பூலமிது தடுக்காதீர்
தங்கத் தமிழரின் உயர்
மேம்பாடு சிறந்து வளர
மென் மேலும் தேவையென்று
வீம்பாகக் கூறி அன்னாள்
வெற்றிலை அடிக்கடி மென்றதால்
மாம்பழக் கன்னத்தி லிப்போ
மறையாத புற்று நோயல்லோ !

✲ நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தெரேசா

தெரேசா! அன்னையே!!
தெய்வத்
தெரியிழையே!

தெய்வீக முன்
தெரு

தெப்பத்திலும்
தெண்டிப்பேயுன்
தெம்பாங்கு

தெளிவற்ற மூடத்
தெம்பலில் சிக்கியோர்க்கு
தெய்வ சகாயம்

தெரியாத் தனமாய்
தெய்வமுன்னை
தெரிவு செய்ததோ?

தென் புலம் புறப்பட்ட
தெய்வச் சுரபியேயுன்
தெய்வப் பாதத்தில் சார்த்தப்படும்
தெரியலிது.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுநகர் மணிக்கோபுரம்

அரண்மனை காலத்தில்
கோட்டையிலே வேந்தனின்
கொடி பறக்கும்.

இப்போ எல்லோரும்
இந்நாட்டு மன்னர்கள்
அதனால் அப்பப்போ
எல்லோரின் கொடிகளையும்
உன் முகடு பறக்க விடும்
நீயோர்
தூய்மையான ஜனநாயகவாதி

உன்னுச்சியில்
பறக்கும் கொடியை
பார்த்துத்தான்
எங்கள் ஆள்வோரை
அடையாளம்
கண்டுகொள்வோம்
எனவே நீ அவர்களின்
அடையாளச் சின்னம்

உன் அக்குள்களில்
காலத்துக்குக் காலம்
பல கட்டவுட்டுகள்
சார்த்தப் பட்டன
இருந்தும் நீ வெட்கித்து
தலை குனியவில்லை
நிமிர்ந்தே நிற்கிறாய்
ஆகையால்
நீயொரு சுமைதாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி
உன்னில் தொங்கும்
ஒலிபெருக்கிகள்
மாறிக்கொள்ளும்
எங்கள் செவிப்பறை
பல்லவிகளையும்
சரணங்களையும்
வாரிக்கொளளும்
இடையிடையே முகாரியும்
முணங்கிக்கொள்ளும்
அதனால் நீயொரு
நவீன இசைக் கல்லூரி

இறந்த காலத்தையும்
நிகழ் காலத்தையும்
கட்டியங் கூறும்
மணிக் கோபுரமே
உன் தொழிலான
சரியான நேரத்தை
நாற்புறமும் காட்டு

எங்கள் வருங்காலத்தை
ஆதாயம் காட்டி நீ
தீர்க்க தரிசியாகவும்
மாறிவிடு

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதநிலவே

ஈழத்துக்காய் இனிய காலத்துக்காய்
இங்கே வந்து காயமுதே
கோலத்திற்காய் கொள்ளை அழகுக்காய்
வேளையறிந்து காயமுதே
சேலை இழந்து பெண்கள் காமச்
சேற்றிலே மூழ்வதைத் தடுக்க
மூலை முடுக்கில் முடங்கிக் கிடக்கும் தமிழன்
மூளை திறந்திடக் காயமுதே

இன்பத்துக்காய் இழந்து படும்
துன்பத்துக்காய் காயமுதே
கண்ணுக்காய் அதையிழந்த பெண்ணுக்காய்
கவலை மறக்க காயமுதே
மண்ணுக்காய் தமிழ் அன்னைக்காய் அவள்
மகிழ்வுக்காய் காயமுதே
உண்மைக்காய் ஈழ நன்மைக்காய் தமிழர்
உணர்வுக்காய் காயமுதே

படுக்காய் படு மக்காய் என்று
பழித்துக் காயமுதே
மிடுக்காய் எழுந்து விடுதலைக்காய் கூவி
விழித்துக் காயமுதே
முடிக்காய் இழந்த கொடிக்காய் கரு
முகிலை விலக்கிக் காயமுதே
ஓடி வரும் பகை ஓடிடவே நன்றாய்
ஓடி ஆடிக் காயமுதே!

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் விண்ணப்பப் பத்திரம்

தவித்ததால் என் மனது நம்
சமுதாய நிலை கண்டு
கவி பாடி உரைக்கின்றேன்
கருத்துப் பல ஆயினும்
செவி சாய்த்தால் போதாது
செயலிலே நீ இறங்கி
புவி போற்ற தம்பி
புனிதமாய் புறப்படடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமை வாள் கொண்டு
வெட்டுகிறார் சமுகத்தை
வேற்றுப் பிரிவாலே
வேரோடு அழியிது மனிதயினம் இதை
மாற்றிட நீ நினைத்து
மார்பு தட்டி எழும்பிடில் போர்
சேற்றிலே சிக்கிய ஒற்றுமைச்
செந்தாமரை மீளுமடா.

முக்கியமாய் நம் நாடு
முன்னேற வேண்டுமெனில்
ஐக்கியமாய் ஒன்று சேர்ந்து
அனைவரும் எழ வேண்டும்
ஐக்கியப் பட்டு விட்டால்
ஆஹா நம் நாடு
சௌக்கிய நிலை கண்டு
சந்தோஷம் கௌவுமடா

மணி சிதறுண்டு கிடப்பின்
மணிக்கழகன்றோ அது
மாலையாய் மாறிடின்
மதிப்புண்டு அதனுருவில்
மணி தரும் இத் தத்துவத்தை
மனிதரும் ஏற்றுக் கொண்டால்
மனமொத்து எல்லோரும்
மகிழ்ச்சியாய் வாழ்ந்திடலாம்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட் / மண்முனை வடக்குப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை 11-05-96ல் மட் / கூட்டுறவுக் கலையரங்கில் நடாத்திய முத்தமிழ் விழாவின் கவி அரங்கத்தில் பாடப்பட்ட கவிதை.

# நாளைய நாம்

தலை குனியாத்
தமிழே
பூந்தமிழே
புக முடியாத இடமெல்லாம்
புகுந்து விளையாடும்
வீரத்தமிழே
உந்தன் மீது
கொண்ட
அன்பின் அடிப்படையில்
தமிழ் தாயின்
காலடியில் இது என்
கவிதை
படிப்படையல்
படைக்கின்றேன்
களிப்படைய
தமிழ் கேளீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுக்கு பாரதி
நானோ
சாதாரண சாரதி
பாரதியின் மரபுத்
தடம் பார்த்துப்
போகின்றவர்கள்
இந்தப் பழம் பெரும்
கவிஞர்கள்
நானோ உதறுகாய்
இளங்காய்
இலங்கைத் தீவின்
நிலை கண்டு
பதறுங்காய்

மரபுக் கவிஞர்கள்
செலுத்துவது
தலைவர் சொன்னது போல்
ரதம்
நான் இங்கு
செலுத்தி வருவதோ
புதுக் கவிதை
ஆட்டோ
இவர்கள் போகும்
இடத்துக்கே
துள்ளித் துள்ளி
புதுக் கவிதையோடு
ஓடி வருகின்றேன்
பாட வருகின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கத் தலைவரே!
அட்டகாசம் சகவாசம் கொள்ளாது
பூக்களை வசியப்படுத்தும்
புனிதம் உங்களிடம்
அன்பு எனும்
மெல்லிய மேகத்திற்கு
வெள்ளிக் கோடு நீங்கள் தான்
உங்கள் அடக்கத்தின்
ஆணி வேரை
நுகர்ந்திருந்தால்
நூலகங்களில்
அமைதி எனும்
வேண்டுகோளுக்கு
வேலை இருந்திருக்காது

அரங்கத்தின் தலைவரே
அடக்கத்தின் தலைவரே
இமிலைத் துமிலன்
ஐயா! அவர்களே!!

என் இதயத் தோட்டத்திலே
எப்போதும்
பூத்திருக்கும்
ஆரையூர் ஐயா!

நீங்கள் தமிழை
வளர்ப்பவர்
மட்டுமல்ல
இன்பத் தமிழை
வளர்க்க
ஒரு கூட்டத்தையே
வளர்ப்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் தோட்டத்தில்
பூத்தன
எத்தனையோ
பூக்கள்
அவைகளில் இது
வாடா மல்லிகை

வாடாதவா
என்றுமே
வாடாதவா
என்னருகே
வாடா தவா
என்று எனையழைத்து

கற்றோர் சபைதனில்
என் முகவரி
முதல் வரியில்
இருக்க வேண்டுமென
நல்ல பெற்றோர் போல்
எனைப் பேணி
நேசிக்கும்
ஆரையூர் ஐயா அவர்களே!

கவியரங்கில்
இன்று நான் நுழைய
நாடக அரங்கமெனும்
நடை வண்டி தந்து
ஊரெல்லாம் சிரிக்க
உதவி செய்யென்று
தோளில் தட்டி திறந்தவெளி
அரங்கில் தூக்கிவிட்ட
அண்ணர் கவிஞர்
வெல்லவூர்க் கோபால்
அவர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி சந்திக்கும்
போதெல்லாம்
இலக்கியப்பணி
எப்படிப் போகிறது
துடிப்போடு செயல்படு
துவண்டிடாதே என்று
புத்தி சொல்லும் சோதரரே
கவிஞரே சாந்தி முகைதீன் அவர்களே!

பூத்துக் குலுங்கும்
சிறு முல்லைப் பூப்போல
கவி வண்ணை
காத்திருக்கும்
சபையோரே!
உங்கள் அனைவருக்கும்
என் முத்து முத்தான
கொத்துக் கொத்தான
எத்தனையோ அன்பு
வணக்கத்தை
என்
இருகை கூப்பி
தெரிவித்துக் கொள்கிறேன்
அன்பு வணக்கம்.

வாயில் பூட்டு
கையில் விலங்கு
ஆடை அவிழ்ந்து
அரை குறையோடு
மூச்சும் கூட
உத்தரவோடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டின் திறப்பு
நமது கையில்
விலங்குடைக்கும்
சம்மட்டிகளோ!
வில்லங்கங்களின்
விலாசங்கள்
தாளம் தப்பும்
வித்துவான்கள்
ஏலம் கூறும்
தரகர் கூட்டம்
இப்படி இருந்தால்
நாளைய நாம்
எப்படி வாழ்வது?

தண்ணீரில் மூழ்கிறது
ஒரு கூட்டம்
தாகத்துக்கு
தண்ணீர் கேட்கிறது
மறு கூட்டம்
மீசையை முறுக்குகிறது
ஒரு கூட்டம்
மீசையை மறைத்து
முகமூடி போடுகிறது
மறு கூட்டம்
கூட்டங்கள்
கூடியதால்
கூடாரத்துள்
போராட்டம்
கூடாத கூட்டங்களால்
நாளைய நாம்
மேலும்
நாயோட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் காலங்களில்
ஜனநாயகம்
வெள்ளை அடித்துக்
கொள்வதும்
துப்பாக்கிச் சேவல்கள்
பொறுமையின்
வறுமையில்
கூவாமல் இருப்பதும்
இருட்டி விட்டால்
அந்தரத்து சுந்தரிபோல்
அந்தப்புரம் குடிவாழ
பதறியடித்துச்
சென்றுவிடும்
சமாதானத் தேவதையை
சாக்கடையிலிருந்து
பூக்கடைக்கு
வர வைப்போம்
இல்லாவிடில்
நாளைய நாம்
மூக்கடைத்து
சாவுக்கிடையில்த் தான்
சங்கீதம் பாடுவோம்

வெள்ளைப் புறா
சிறகு விரிக்க
மஞ்சள் புறாக்கள்
மகிழ்ச்சி இழக்கின்றன
இந்தக் கள்ளப் புறாக்களுக்கேன்?
இப்படிக் கபடத்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தின்
சிறகொடிந்தாலும்
பறவாயில்லை
போட்ட வேசத்தை
கலைப்பதில்லை
என்ற
ரோசத்தை
முதுகில் சுமந்தால்
நாளைய நாம்
நாசத்தைச் சுமந்து
நாலு பேர்
மிஞ்சுவோம்.

வாச்சருக்கு இருபது
டீச்சருக்கு நாற்பது
பௌசர் ரைவருக்கு
அறுபது
பேங்கருக்கோ!
பெரிய தாள் ஒன்று
சரஸ்வதிக்கு கரிப் பூச்சு
லெட்சுமிக்கு சாமர வீச்சு
சரஸ்வதி மூதேவியாக
லெட்சுமி ஜெய தேவியாகிறாள்
எத்தனையோ நிஜப்பட்டம்
ஏக்கத்தோடு
சோகத்தில் நிற்க
பண நாயகத்தால்
சில குதிரையோடிய பட்டங்கள்
கொலுவேறுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி
வேலைக்கு விலையேறினால்
நிலை மாறினால்
நாளைய நாம்
மலையேற வேண்டியது தான்

கள்ளுக்கடை முதலாளி
வீட்டைவிட்டு வெளியேறி
சின்ன வீட்டில் குடியிருப்பு
சிங்காரி துணையிருப்பு
மடிப்பு நீங்கா வேட்டி
சலவைக்கு போய்வந்த
சால்வை
ஊருக்குள் பெரிய மனிதன்
காந்தி பக்தன்
அகிம்சை வாதி
தினசரித் தாளில்
இவர் செய்தி
முற்பக்கம்
போலிக்கு வெள்ளை பூசி
பூசையறையில்
தூக்கி வைக்கும்
கூட்டத்தை
இப்போது எதிர்க்காவிடில்
நாளைய நாம்
போலிகளை உருவாக்க
ஏதுவாய் இருந்ததாக
அழியாப் பழியை
சுமந்து கொள்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர் செழிக்க வேண்டுமெனில்
களை களைய வேண்டும்
களை களையாதிருந்தால்
பயிர் சாகவேண்டும்
ஒன்றை நீ கொன்றால்
ஒன்று உயிர் பெறும்
செய்வதும் செயல்
செய்யாமல் இருப்பதும் செயல்
தருமம் செய்வதும் செயல்
பாவம் செய்பவனை
தடுக்காமல் இருப்பதும் செயல்
களை பிடுங்க
கைகோர்ப்போம்
நற்பயிரை கண்டிடவே.

பிள்ளைகளைக் காப்பாற்ற
விமானம் ஏறுகிறது
படிதாண்டா
தாய்க்குலம்
வேதனம்
யுத்தச் செலவுக்கு வருகிறது
தாய்
தாய்நாடு வந்தால்
தலைவன் இல்லை
இப் பூவுலகில்
மீனில் எண்ணை எடுத்து
மீன் பொரிக்கப் படுகிறது
கோழிக் கொழுப்பெடுத்து
கோழி வாட்டப்படுகிறது
உன் உழைப்புக் கறக்கப்பட்டு
உயிரிழப்புக்குத் தாரை வார்க்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்பு தின்னப்படுகிறது
அது செமிக்க
இஞ்சி மருந்தாக்கப்படுகிறது
கொஞ்சம் சிந்தியுங்கள்
இல்லாவிடில்
நாளைய நாம்
நஞ்சுக்குத் தஞ்சம்தான்

வேலியே பயிரை
மேய்கிறது என்று
ஒப்பாரி
வைக்கும் கூட்டம்
இமை
கண்ணைக் கடிப்பதை
கவனிப்பதில்லை
வேலிக்குப் போட்ட
முள்
காலில் தைக்கிறது
என்று சொன்னால்
எள்ளு நசுக்குண்டால்த்தானே
எண்ணை என்பது
எள்ளளவும் தெரியவில்லை
என்று
ஏளனம் செய்தால்
நாளைய நாம்
கோவணத்தை
இழந்த பின்னும்
குரவை போட
வேண்டியதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரலில் காயம்பட்டு
விசக்கிருமி
ஊடுருவினால்
காலைக் காப்பாற்ற
விரலைக் கழட்ட
வேண்டும்
மேவி விட்டால்
ஆளைக் காப்பாற்ற
காலைக் கழற்றி
கையில்
கோலைக் கொடுக்க
வேண்டும்
இல்லையென்றால்
ஆளை இழக்க வேண்டும்
ஆளை இழப்பதா
விரலை இழப்பதா
நாளைய நாம் வாழ
இன்றைய நாம்
சிந்திக்க வேண்டும்

பிழையைச் சரியென்றால்
சரியானது பிழையாகும்
நாலும் மூன்றும் எட்டென்றால்
நாலும் நாலும் பிழையாகும்
பிழையைச் சரியாக்கி
சரியைப் பிழையாக்கி
இப்போ வைப்போமானால்
நாளைய நாம்
எதிர் வரும் சந்ததியின்
ஏச்சுக்கு இடம் வைப்போம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கற்பனையை
விற்பனையாக்கி
தற்பெருமை
காட்டும்
கூட்டத்தின்
ஒப்பனையைக் கலைத்து
நாளைய நாம்
பிறர் கற்பதையே
நற் பெருமை
எனும் கூட்டத்தை
வளர்த்திடுவோம்.

நாளைய நாம்
எப்படி - என்பதை
சிந்திக்க
இப்படியொரு
தலைப்புத் தந்து
செப்பிடு கவிதையென
அழைப்பித்த
கலாசார பேரவைக்கும்
அமைதிகாத்த
இந்தப் பேரவைக்கும்,
பூத்துவிட்ட
நன்றியை
கோர்த்து நான்
தந்து விட்டு
விடை பெறுகிறேன்
நாளைய நாம்
நல்லபடி சந்திப்போம்.
நன்றி! வணக்கம்!!

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ப்போம் அன்புப் பயிர்

பூ முனை போர் முனையானதும் - என்
பேனாமுனை வேதனையானது
சுதந்திரம் கேட்கும்
சுந்தரமும், சுல்த்தானும்
ஒற்றுமைச் சட்டையை
கிழித்துப் போட்டு
வேற்றுமை வாளை
தூக்குவதேன்?

பிட்டும் தேங்காய்ப் பூவும்
ஒன்றாய் இருந்தால்
ஆஹா... அழகு
ஒன்றை ஒன்று
தின்றால்
அது மகா பழுது

ஒற்றுமையாய்
ஒற்றுமையய் விதைப்போம்
அகத்திலெல்லாம்
அன்பு எனும்
நற்பயிரை வளர்ப்போம்.

நீதிவாக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படி இவர்கள் சொன்னார்கள்

கவிஞர் இரா. தவராஜா எழுந்து வரும் எழுச்சிக் கவிஞர். அவரது அருமைக் கவிதை அடிகள் என் இதயத்தைக் கவர்ந்தன.

*கௌரவ செழியன் ஜே. பேரின்பநாயகம்*
*மட் / மாநகர முதல்வர்.*

(தினகரன் 05-06-94)

இரா தவராஜா நிறைந்த கவிதா ஆற்றல் குடி கொண்ட வாலிபர். சமூகக் கொடுமை, அநீதி, அழிவுகள், யதார்த்தம் இவைகளைப் பொடி வைத்து எழுதக் கூடிய வல்லமை இந்தப் பேனாச் சக்கரவர்த்திக்கு உண்டு. தவராஜா மட்டுமண்ணில் மக்களின் மனங்களில் நிறைந்த மகத்தான பேனாப் போராளி.

*கவிஞர் ரீ. எல். ஜவ்பர்கான்.* (ஜே.பி)

இக்கவிஞர் மட்டுநகரின் ஒரு கவிதைத் தேன் பொந்து இவர் கவிதை நல்லோர் நெஞ்சில் வாழும் என்பது உண்மை. எனவே இக் கவிஞர் எழுச்சிக் கவிஞராக என் நெஞ்சில் பவனி வருகின்றார்.

*விஸ்வப்பிரம்மஸ்ரீ*
*வை. இ. எஸ். காந்தன் குருக்கள்.*
*(தர்மோதயம் ஸ்தாபகர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org